**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை: 20180425

**அமெரிக்க கடற்படை வைத்தியசாலை கப்பல் மேர்சி 2018 பசுபிக் பங்காண்மையின் நிமித்தம் திருகோணமலையை வந்தடைந்தது**

கொழும்பு, ஏப்ரல் 25, 2018: 2018 பசுபிக் பங்காண்மை நடவடிக்கையை (2018 Pacific Partnership mission) மேற்கொள்ளும் நிமித்தம் அமெரிக்க கடற்படை வைத்தியசாலை கப்பல் யூ.எஸ்.என்.எஸ். மேர்சி ஏப்ரல் 25 ஆம் திகதி திருகோணமலையை வந்தடைந்தது.

பசுபிக் பங்காண்மை 2018 நடவடிக்கையானது மே மாதம் 8 ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளதுடன், உள்ளூர் மக்களுக்கு சிகிச்சைகளை வழங்கவும் சிறப்பான செயற்பாடுகளை பரிமாற்றிக் கொள்ளவும் இலங்கை மருத்துவ தொழில்சார் நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றும் அமெரிக்க மற்றும் ஏனைய இராணுவ வைத்தியர்கள் மற்றும் மருத்துவ பணியார்களையும் அது கொண்டிருக்கும். மேலதிகமாக, கட்டிட பொறியியல் திட்டங்கள், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண (HA/DR) தயார்நிலை பயிற்சி, மற்றும் உள்ளூர் சமூகம் முழுவதுமான பொதுநலன் நடவடிக்கைகள் ஆகியவற்றில் அமெரிக்க மற்றும் பங்காளி நாடுகளின் படையினர் தங்களது இலங்கை சகாக்களுடன் இணைந்து செயற்படவுள்ளனர்.

“தேவைகளில் இலங்கை மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் மனிதாபிமான மற்றும் அனர்த்த நிவாரணங்களில் வளர்ச்சிகாணும் எமது பங்காண்மையை விஸ்தரிப்பதற்கும் அமெரிக்க மற்றும் இலங்கை இராணுவத்தினருக்கு அதிசிறந்த வாய்ப்பொன்றை பசுபிக் பங்காண்மை 2018 வழங்குகிறது”, என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெஷாப் தெரிவித்தார். “மருத்துவ நிலையங்கள் தொடக்கம் இலவச பொது இசை நிகழ்ச்சிகள் வரை அனைத்திலும் அமெரிக்காவின் சிறந்தவற்றை உள்ளூர் சமூகங்களுக்கு எமது கடற்படையினர் வழங்குவர்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

முழுமையான உபகரண வசதிகளை கொண்ட 12 சத்திரசிகிச்சை அறைகள், 1000 கட்டில் வைத்தியசாலை வசதி, டிஜிட்டல் கதிரியக்க சேவைகள், மருத்துவ ஆய்வுக்கூடம், மருந்தகம், பார்வைத்திறன் ஆய்வகம், CAT-scan மற்றும் இரு ஒட்சிசன் உற்பத்தி நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை யூ.எஸ்.என்.எஸ். மேர்சி கொண்டுள்ளது. இந்த கப்பலானது பெரிய இராணுவ ஹெலிகப்டர்களை தரையிறக்கக் கூடிய ஹெலிகப்டர் இறங்குதள மேடையொன்றையும் கொண்டுள்ளது. இந்த கப்பல் 2018 நடவடிக்கையின் நிமித்தம் இதற்கு முன்னதாக இந்தோனேசியாவின் பெங்கூளு மற்றும் மலேசியாவின் கோலா லம்பூர் ஆகிய இடங்களில் தரித்து நிறுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் இருந்து புறப்பட்டதன் பின்னர், இந்திய-பசுபிக் பிராந்தியம் முழுவதுமான நட்புறவுகள், பங்காண்மைகள், மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்புகளை பலப்படுத்தும் நிமித்தம் யூ.எஸ்.என்.எஸ். மேர்சி வியட்நாமிலும் ஜப்பானிலும் நிறுத்தப்படவுள்ளது.

“எமது அணியினர் இலங்கை மக்களுடன் இணைந்து பணியாற்றுவதை காண்பதற்கு நான் உற்சாகமாக இருக்கிறேன்” என்று பசுபிக் பங்காண்மை 2018 இன் நடவடிக்கை தளபதி கெப்டன் டேவிட் ப்ரெட்ஸ் தெரிவித்தார். “பசுபிக் பங்காண்மையின் ஊடாக நாம் இலங்கை மக்களுடன் நம்பிக்கை, நட்புணர்வு மற்றும் பங்காண்மையின் பிணைப்புகளை கட்டியெழுப்புகிறோம். எமது

தேசங்கள் முகம்கொடுக்கும் மனிதனால் உருவாக்கப்பட்ட மற்றும் இயற்கை அனர்த்தங்களுடன் கூடிய ஏராளமான எதிர்பார நிகழ்வுகள் தொடர்பில் நாம் ஒன்றுபட்டு தயாராவதற்கு அது எமக்கு உதவும். இந்த நாட்டில் விருந்தினர்களாக இருப்பதற்கும் எமது இலங்கை சகாக்களுடன் இணைந்து பணியாற்றுவதிலும் நாம் பெருமையடைகிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பசுபிக் பங்காண்மை என்பது இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் நடத்தப்படும் மிகப்பெரிய வருடாந்த பல்தரப்பு அனர்த்த பதிலளிப்பு தயார்நிலை நடவடிக்கையாகும். இவ்வருட நடவடிக்கையானது அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பெரு மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவ மற்றும் சிவில் பணியாளர்களை கொண்டுள்ளது. சாத்தியப்பாடுடைய மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த பதிலளிப்பு நிலைமைகளுக்கு சிறந்த தயார்படுத்தலுடன் இருக்கும் நிமித்தம் நடவடிக்கை இடம்பெறும் நாட்டின் சகாக்களுடன் இணைந்து பணியாற்றும் 800 இற்கும் மேற்பட்ட அமெரிக்க மற்றும் பங்காளி நாடுகளின் இராணுவ மற்றும் சிவில் பணியாளர்களை பசுபிக் பங்காண்மை 2018 உள்ளடக்கியுள்ளது.